இயற்கை எய்தியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித் துளி மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(அனைவரும் ஒரு மணித் துளி மவுனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம்

*3697—திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி எத்தனை வழக்குகள் பதிவாகியுள்ளன?

(ஆ) எத்தனை பேர் தண்டிக்கப்பட்டனர்?

(இ) சிறையில் அடைக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1977-ஆம் ஆண்டு முதல் 1988-ஆம் ஆண்டு வரை 13,682 வழக்குகள் பதிவாகியுள்ளன.

(ஆ) தண்டிக்கப்பட்டவர்கள்—566.

(இ) சிறையில் அடைக்கப்பட்டவர்கள்—381.

வேலைவாய்ப்பில் முன்னுரிமை.

*5538ஏ—திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மருத்துவத் தகுதியின் அடிப்படையில் ஒய்வுபெறுபவர்களின் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மருத்துவத்தகுதியின் அடிப்படையில் ஒய்வு பெறுபவர்களின் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கும் செயற் குறிப்பு ஏதும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை. ஆனால் 50 வயதிற்குள் மருத்துவத் தகுதியின் அடிப்படையில் ஒய்வு பெறும் அரசு அலுவலர்களின் வாரிசுகளுக்கு (ஒருவருக்கு), வேலைவாய்ப்பு அலுவலகத்தை நாடாமலேயே நேரடியாகப் பணி நியமனம் செய்யலாம் என்ற சலுகை ஒன்று நடப்பிலுள்ளது.

[1990 மார்ச் 19]

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப்பணியில் இருக்கும்போது குணப்படுத்தமுடியாத நோயின் காரணமாக, அல்லது விபத்தின் காரணமாக கால்களை இழந்து அல்லது திடீரென்று இரண்டு கண்கள் இழந்து பார்வையிழந்து போகிறவர்கள், மருத்துவ அடிப்படையில் ஒய்வு பெறுவதைத் தவிர வேறு வழி இல்லை என்ற அடிப்படையில், மருத்துவ அடிப்படையில் ஒய்வு பெறுபவர்களுடைய குடும்பத்தினரைக் காப்பாற்ற இனியாவது அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய சூழ்நிலைகளில் மிகுந்த அனுதாப உணர்வோடு இந்தச் சலுகை அளிக்கப்படுகிறது என்பதை என்னுடைய பதிலிலேயே முதலில் குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணையின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து வேலை அளிக்கப்படுவது தொடர்பாக இன்னொரு கேள்வியையும் எழுப்ப விரும்புகிறேன். கடந்த ஆண்டு அரசுப் பணியில் சேர வயது வரம்பு உயர்த்தப்பட்டு, அதுபற்றிய ஆணை மாண்புமிகு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டது. அதுபோல அரசு பணிக் காலத்தில் இறந்தவர்களது வாரிசுகளுக்கு வேலை அளிப்பதைப் பொறுத்தவரையிலும் கூட வயது வரம்பு உயர்த்தி அறிவிக்கப் படுமா?

(9-05 மணி)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்வியைத் தாண்டி சற்று அப்பால் செல்லுகின்ற காரணத்தால், தனிக் கேள்வி போட்டால்தான் பதில் அளிக்க முடியும். இருந்தாலும் இதுபற்றி அரசு யோசிக்கும்.

திரு. இரா. மோகன் : பேரவைத் தலைவரவர்களே, வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதில் பலநேரங்களிலே காலதாமதம் ஆகின்ற காரணத்தால், அந்தக் குடும்பங்கள் மிகப் பெரிய வேதனையிலே சிக்கிச் சுழல்வது அரசுக்குத் தெரியுமா? ஆகவே வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதென்ற அந்தக் கொள்கையைச் சிறப்பான முறையிலே நடைமுறைப்படுத்தும் வகையிலே ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பை அளிக்க வேண்டுமென்ற ஒரு கொள்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, வாரிசுகளுக்கு வேலைவாய்ப்புத் தருவதிலே காலதாமதம் ஏற்படுவதாக உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அது அரசுக்குத் தெரியுமா என்றும் கேட்டார்கள். அரசுக்குத் தெரிவதைவிட உறுப்பினர் அவர்களுக்கு நன்கு தெரிந்திருக்கிற

காரணத்தால் அப்படிக் காலதாமதம் ஆகியிருக்கின்ற நேர்வுகள் எவையெவை என்பது குறித்து அரசுக்கு அவர்கள் தெரிவிப்பார்களானால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வழி வகை உண்டு.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 50 வயதுக்குள் அந்த மாதிரி ரிட்டையர் ஆனால்தான் வாரிசுகளுக்கு வேலை என்று இருக்கிறது. அந்த முறையிலே வேலை செய்ய முடியாதவர்கள், பெர்மனன்ட் டிஸ்எபிலிட்டீஸ் என்று 55 வயதுவரை ஆனவர்கள் சொன்னால், அவர்களுடைய வாரிசுகளுக்கும் வேலை கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, இது 'மருத்துவத் தகுதியின் அடிப்படையில்' என்பதற்குத்தான் 50 வயது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்சினை இதில் எழவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம், எந்தத் துறையில் ஓய்வு பெறுகிறார்களோ அந்தத் துறையிலேதான் வேலை கொடுப்பது என்ற முறையில் இருக்கிறது. அதை மாற்றி, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, எந்தத் துறையிலே வேண்டுமானாலும் வேலை கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, அந்தத் துறையிலேதான் அவர்களுக்குத் தர இயலும் என்றாலும்கூட, அவர்களுக்குத் தகுதியில்லாத துறையிலே அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதென்பது இயலாத காரியம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

உயர்நிலைப் பள்ளிகளில் புவியியல் பாடம்.

*5199—திரு. செங்கை சிவம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் வரலாறு பட்டம் பெற்ற ஆசிரியர்களை வைத்துப் புவியியல் பாடம் நடத்துவது பற்றி அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?